**மாதிரி 1**

**வேலைவாய்ப்பு வேண்டி விண்ணப்பம்.**

சென்னை.
06.06.2014

<u>*அனுப்புநர்:*</u>

க. முருகன்,
3, குமரன் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை – 600 004.

<u>*பெறுநர்:*</u>

திரு. வி.எம். கங்காதரன் அவர்கள்,
இயக்குநர்,
பட்டர்ஃபிளை நிறுவனம்,
11, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

**பொருள்: தங்கள் நிறுவனத்தில் உற்பத்திப் பொறியியலாளர் வேலை வேண்டி....**

தங்கள் நிறுவனத்தில் உற்பத்திப் பொறியியலாளர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என்ற விளம்பரத்தை 04.06.2014 அன்று, 'தி இந்து' செய்தித்தாளில் படித்தேன். அப்பணியில் தங்கள் நிறுவனத்தில் பணிபுரிய விருப்பம் கொண்டு, இக்கடிதம் எழுதுகின்றேன்.

நான் 2013–இல், சத்தியபாமா பொறியியல் கல்லூரியில் உற்பத்திப் பொறியியல் (Production Engineering) படித்து, 90 விழுக்காடு மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி அடைந்துள்ளேன்.

தங்கள் நிறுவனத்தில் பணி செய்யும் வாய்ப்புக் கிடைப்பின் பொறுப்புடனும், நேர்மையுடனும், பணிவுடனும் பணிசெய்து தங்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உழைப்பேன் என்பதைப் பணிவுடன் கூறிக்கொள்கிறேன்.

என்னுடைய தன்குறிப்புகளையும், பிறதிறன் சான்றிதழ்களையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

நன்றி, வணக்கம்.

இப்படிக்கு,
க. முருகன்